# ஆஸ்துமா முதலுதவியின் 4 படிகள்



## 1

அவரை நேராக அமர வைக்கவும்



## 2

நீலம்/சாம்பல் நிற ரிலீவர் இன்ஹேலரை 4 முறை தனித்தனியாகப் பயன்படுத்தவும்

– இன்ஹேலரை **குலுக்கவும்**
– இன்ஹேலரை **1 முறை** ஸ்பேசருக்குள் அழுத்தவும்
– ஸ்பேசரிலிருந்து **4 முறை மூச்சை உள்ளிழுத்துவிடவும்**

இதை 4 முறை திரும்பச் செய்யவும்

நினைவில் நிறுத்த: **குலுக்கவும், 1 முறை அழுத்தவும், 4 முறை மூச்சை உள்ளிழுத்துவிடவும்**

அல்லது Bricanyl இன்ஹேலர் (6 & அதற்கு மேற்பட்ட வயதினர்) / Symbicort இன்ஹேலரிலிருந்து (12 வயதுக்கு மேற்பட்டோர்) 2 தனித்தனி டோஸ்களை எடுக்கவும்




## 3

4 நிமிடங்கள் காத்திருக்கவும்

முன்னேற்றம் இல்லை எனில், மேலே உள்ளபடி **நீலம்/சாம்பல் நிற ரிலீவரை மேலும் 4 முறை தனித்தனியாகப் பயன்படுத்தவும்**

அல்லது Bricanyl / Symbicort இன்ஹேலரிலிருந்து மேலும் 1 டோஸை எடுக்கவும்




## 4

அப்போதும் முன்னேற்றம் எதுவும் இல்லை எனில், ஆம்புலன்ஸுக்கு மூன்று பூஜ்ஜிய (000) எண்ணை அழைக்கவும்

அவசர உதவி வரும் வரை, 4 நிமிடங்களுக்கு ஒரு முறை இன்ஹேலரை 4 முறை தனித்தனியாகப் பயன்படுத்தவும்

அல்லது 4 நிமிடங்களுக்கு ஒரு முறை Bricanyl / Symbicort இன்ஹேலரிலிருந்து 1 டோஸ் எடுக்கவும் (3 Symbicort டோஸ் வரை தொடரவும்)

பின்வரும் காரணங்களுக்கு அவரச உதவியை உடனடியாக அழைக்கவும். மூன்று பூஜ்ஜிய (000) எண்ணை அழைக்கவும்:

- குறிப்பிட்ட நபர் மூச்சுவிடவில்லை எனில்.
- குறிப்பிட்ட நபரின் ஆஸ்துமா திடீரென மோசமடைந்தால் அல்லது முன்னேற்றம் எதுவும் இல்லாதிருந்தால்.
- குறிப்பிட்ட நபரின் ஆஸ்துமா தாக்குதலின் போது, ரிலீவர் இல்லாதிருந்தால்.
- அது ஆஸ்துமா என்று உறுதியாக உங்களுக்குத் தெரியவில்லை எனில்.
- குறிப்பிட்ட நபருக்கு ஏதேனும் கடும் அலர்ஜி இருந்தால், அவருக்கான கடும் அலர்ஜி தடுப்பு செயல்முறையை முடித்து, ஆஸ்துமா முதலுதவி செய்யவும். அவருக்கு ஆஸ்துமா இல்லை என்றாலும், நீலம்/சாம்பல் நிற ரிலீவர் மருந்தைத் தருவதால் பாதிப்பு ஏற்படுவதற்கு சாத்தியம் குறைவு.

இந்த மகரந்தச் சேர்க்கைக் காலத்தில் உங்களைக் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

ஆஸ்துமா மற்றும் அலர்ஜிகளைக் கட்டுப்படுத்துவது அவசியம்.

மேலும் தகவலுக்கு, betterhealth.vic.gov.au என்பதற்குச் செல்லவும் அல்லது 1800 ASTHMA (1800 278 462) என்ற எண்ணை அழைக்கவும்.

இந்தத் தகவலை அங்கீகரித்து வெளியிடுவது, விக்டோரியா மாகாண அரசு, 1 Treasury Place, Melbourne (1708025)
© விக்டோரியா மாகாணம் (Department of Health and Human Services).
லோகோ தவிர்த்து மற்றவை CC BY International 4.0 உரிமத்தின் கீழ் வெளியிடப்படுகிறது.

ASTHMA AUSTRALIA

VICTORIA State Government